பிரசார்பாரதி
அகிலஇந்தியவானொலி, சென்னை-4

**24 04 2026** **12 40** செய்திஆசிரியர்
வெள்ளிக்கிழமை நண்பகல் ஆர். சிதம்பரநாதன்
ஆகாஷவாணி

**(Tune)**

செய்திகள் - வாசிப்பவர்—வடிவழகி கபிலன்

தலைப்புச்செய்திகள்

1. பஞ்சாயத்துராஜ், அடிப்படை ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டாக திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. மேற்குவங்கத்தில் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

3. ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கல்வி மற்றும் மேம்பாட்டிற்காக கடந்த நிதியாண்டில் 7 ஆயிரத்து தொள்ளாயிரத்து 81 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது..

4. அமெரிக்காவில் மருந்துகளின் விலையை குறைப்பதற்காக பல்வேறு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு**Donald Trump** தெரிவித்துள்ளார்.

5. பானிபட் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shruti Ahlawat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

. . இனி விரிவான செய்திகள் . .

**24 04 2026 12 40** தேசிய பஞ்சாயத்ராஜ் தினம்-1

தேசிய பஞ்சாயத்ராஜ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் , பிரதமர்உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் , பஞ்சாயத்து ராஜ் அடிப்படை ஜனநாயகத்தின் எடுத்துக்காட்டாக திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

கிராம அளவில் நிர்வாகப் பங்களிப்புடன் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற இலக்குடன் பஞ்சாயத்துராஜ் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டில் பஞ்சாயத்துகளின் பங் களிப்பு மிகவும் முக்கியமானது என்று கூறிய அவர் , வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறுவதாக தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி பிரதமர் திரு.நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், மக்களுடன் நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டும் என்று பஞ்சாயத்து ராஜ் பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

24 04 2026 12 40 தேசிய பஞ்சாயத்ராஜ் தினம்-2

இந்நாளையொட்டி அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் வாழ்த்து தெரிவித்து கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் ஜனநாயகத்தின் நெடுந்தூணாக பஞ்சாயத்துகள் விளங்குவதாக தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்ராஜ் அமைப்புகளுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரமும், அரசியல் அமைப்பு அந்தஸ்தும் வழங்கப்படும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட தினத்தை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 24-ம் தேதி இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

தேவிபத்-கதிர் ஏர்நெட்-23

**24 04 2026** **12 40** மேற்கு வங்கம் — பிரச்சாரம் **-1**

மேற்கு வங்கத்தில் **142** தொகுதிகளில் வரும் **29-**ம் தேதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி , **DumDum**உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

மேற்குவங்க மாநிலத்தில் நடைபெற்ற முதல்கட்ட வாக்குப்பதிவு மக்கள் மாற்றத்தை விரும்புவதையே காட்டுவதாக பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலுக்குப்பின் பிஜேபி ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

முதற்கட்ட வாக்குப்பதிவின்போது விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்த தேர்தல் ஆணையத்துக்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாக திரு அமித் ஷா கூறினார்.

திரிணமுல் காங்கிரஸ் கட்சித்தலைவர் செல்வி மம்தா பானர்ஜி , **Bhadanipur** உள்ளிட்ட இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**24 04 2026** **12 40** மேற்கு வங்கம் — பிரச்சாரம் **-2**

மேற்கு வங்கத்தில் **152** தொகுதிகளுக்கு முதல் கட்டமாக நேற்று நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் **92** புள்ளி எட்டு எட்டு சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் சுமூகமாக நடைபெற்றதா அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. மனோஜ்குமார் அகர்வால் தெரிவித்துள்ளார்.

தேவிபத்-எல் கே — சி-கதிர் ஏர்நெட்-**20**

ஷெட்யூல்டு வகுப்பு மக்களின் கல்வி மற்றும் மேம்பாட்டிற்காக கடந்த நிதியாண்டில் **7** ஆயிரத்துதொள்ளாயிரத்து **81** கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதாக சமூக நீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இத்தகவலை தெரிவித்த அமைச்சர், **75** லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

நாட்டின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சமூக நீதி மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சியின் பயன்கள் கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சமூக ரீதியாக பின்தங்கிய மற்றும் ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களின் கல்விக்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினத்தோர், துப்புரவு தொழிலாளர்கள், பொருளாதார ரீதியாக பின்தங்கியோர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்காகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சமூக நலத் திட்டங்களின்கீழ், அளித்துவரும் உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாகவும் திரு வீரேந்திர குமார் தெரிவித்தார்.

எல் கே — சி தில்லி **18**

சார்க் நாடுகளுக்கான உதவித் திட்டத்தின்கீழ், மாலத்தீவுக்கு **3** ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்க இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

அந்நாட்டு தலைநகர் மாலேயில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள தகவலில், முதல்கட்டமாக இந்த தொகையை விடுவிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த **2024**-ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கியும், மாலத்தீவு அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இந்த தொகையை அந்நாடு செலவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவு ஏற்கனவே பெற்ற கடன்களை முறையாக திருப்பி செலுத்திவருவதாகவும், அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அண்டை நாட்டுக்கு முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் மாலத்தீவுக்கு இந்தியா நிதியுதவி அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாசாகர் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ், மதிப்பு மிக்க நட்பு நாடாக மாலத்தீவு திகழ்ந்து வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**24 04 2026 12 40** அமெரிக்கா - துவிவேதி

அமெரிக்க ராணுவ போர் பயிற்சி கல்லுரியின் சர்வதேச பிரபலங்களின் பட்டியலில் இந்திய ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய ராணுவ உயரதிகாரிகள் ஜென்ரல் வி கே சிங், ஜென்ரல் **Bikram Singh** ஆகியோர் ஏற்கனவே இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்க ராணுவ போர் பயிற்சி கல்லூரியில் ஜென்ரல் உபேந்திர துவிவேதி பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜென்ரல் உபேந்திர துவிவேதி, அமெரிக்க ராணுவ போர் பயிற்சி கல்லூரி மாணவர்களிடையே கலந்துரையாடினார்.

எல் கே — சி ஏர்நெட்-7

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் நேற்று வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு இயந்திரங்கள், வி வி பேட் கருவிகள் ஆகியவை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் சீலிடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள காப்பு அறைகள் மற்றும் மையங்களை சுற்றி பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் மையத்தின் அனைத்துப் பகுதிகளும் கண்காணிப்பு கேமரா மூலம் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹாலன் ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — சுரேகா —30 Sec. )**

**24 04 2026** **12 40** தமிழகம் — பாதுகாப்பு **-2**

சிவகங்கை மாவட்டத்தில் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — முருகன் —38 Sec.)***

தேவிபத்-கதிர் ஏர்நெட்**-14 +18 =32**

**24 04 2026** **12 40** ஆந்திரா — சிங்கப்பூர் பயிற்சி

ஆந்திரப்பிரதேச மாநில அமைச்சர்களுக்கு சிங்கப்பூரில் அரசு நிர்வாகம், தொழில்நுட்பம், நீடித்த வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்த பயிற்சி நடைபெற்று வருகிறது.

நான்காவது நாளாக நடைபெற்றுவரும் இந்த பயிற்சியில் பேசிய அந்நாட்டு அமைச்சர் திரு **Lim Swee,** சிங்கப்பூரில் பெரிய அளவிலான மாற்றம் குறித்து அமைச்சர்களுக்கு எடுத்துக்கூறினார்.

உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி என்ற கொள்கையுடன் சிங்கப்பூர் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இப்பயிற்சியின்போது போக்குவரத்து நிர்வாகம், அரசுக்கும், தனியார் துறையினருக்கும் இடையிலான ஒத்துழைப்பு, நீண்டகால திட்டமிடல், திறன்மிக்க நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் கலந்தாய்வுக் கூட்டங்களும் நடைபெற்றன.

எல் கே — சி தில்லி - **10**

**24 04 2026** **12 40** சிபி ஜார்ஜ் — ஆலோசனை

தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவது தொடர்பாக, மேற்கத்திய நாடுகளுக்கான வெளியுறவுத்துறை செயலர் திரு சிபி ஜார்ஜ் இன்று ஐ நா-வின் தீவிரவாத தடுப்பு பணிகளுக்கான தலைமைச் செயலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஐ நா அமைப்புடன் இணைந்து, தீவிரவாத தடுப்புப் பணிகளில் இந்தியா அளித்துவரும் ஒத்துழைப்பு குறித்து இந்த சந்திப்பின்போது திரு சி பி ஜார்ஜ் எடுத்துக் கூறினார்.

எல் கே — சி ஏர்நெட்- **6**

**24 04 2026 12 40 Trump -** மருந்துவிலை குறைப்பு

அமெரிக்காவில் மருந்துகளின் விலையை குறைப்பதற்காக மருந்து நிறுவனங்களுடன் பல்வேறு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் **Donald Trump** தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் இதனை தெரிவித்த அவர் , அமெரிக்க வரலாற்றில் இல்லாத அளவுக்கு மருந்துகளின் விலை குறைக்கப்படுவதாக அவர் கூறினார்.

உலகளவில் உள்ள **17** மருந்து நிறுவனங்கள் அமெரிக்காவில் உளள நேயாளிகளுக்கு உலகிலேயே மிகக்குறைந்த விலையில் மருந்துகளை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்து சந்தையில் **86** சதவீத நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அதிபர் **Donald Trump** கூறியுள்ளார்.

தேவிபத்-கதிர் ஏர்நெட்- **10**

பானிபட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shruti Ahlawat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **5-7, 6-2, 6-1** என்ற செட் கணக்கில், இந்தியாவின் வைதேகி செளத்ரியை வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் **Akahksha Dileep**-மும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------

தென்கொரியாவின் **Gwangju**-வில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — ஜப்பானின் **Takeru Yuzuki** இணையும்,இந்தியாவின் நிக்கி கலியாண்டா - தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில்இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட் டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-------------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் குவஹாத்தியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில்ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.

வடிவு — சி ஏர்நெட் - 16